உடல் பருமன், துரித உணவு, பதப்படுத்தப்பட்ட உணவு எதிரொலி: மகளிருக்கு மார்பக புற்று நோய் ஏற்படுவது அதிகரிப்பு

'அப்பல்லோ' புற்றுநோய் மருத்துவமனை டாக்டர் எம்.ஏ.ராஜா எச்சரிக்கை

சென்னை, ஜன. 28–

நாட்டிலேயே ஐதராபாத்திற்கு அடுத்தபடியாக மார்பகப் புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்படும் நகரமாக சென்னை இருப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. அதுவும், 45 வயதுக்கு மேற்பட்ட பெண்களிடையே இந்த நோயின் பாதிப்பு அதிகமாக இருக்கிறது. பாதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால், 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் வருடாந்திர மேமோகிராம் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டுமென அப்பல்லோ கேன்சர் இன்ஸ்டிட்யூட்டின் மூத்த ஆலோசகரும், மருத்துவ புற்றுநோயியல் நிபுணருமான டாக்டர் எம். ஏ. ராஜா எச்சரித்தார்.

உடல் பருமன் மார்பக புற்றுநோய்க்கான அறியப்பட்ட முதன்மையான ஆபத்து காரணியாகும். துரித உணவுகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை வழக்கமாக உட்கொள்வதை குறைக்க வேண்டியது அவசியம். காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை தினசரி உட்கொள்ளல் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

இது தவிர, வயது, குடும்ப வரலாறு, உடல் பருமன், ஹார்மோன் சிகிச்சை, ஆரம்ப மாதவிடாய், தாமதமாகும் மாதவிடாய், இனப்பெருக்க வரலாறு,

வைட்டமின் டி குறைபாடு, உட்கார்ந்த வாழ்க்கை முறை ஆகியவை சில பொதுவான ஆபத்து காரணிகள். ஆக, வாழ்க்கை முறை மாற்றமென்பது நலமுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்வதற்கும் வழிவகுக்கும் டாக்டர் எம்.ஏ.ராஜா.

இந்தியாவில் உள்ள பெண்களிடையே மார்பக புற்றுநோய் மிகவும் பொதுவான நோயாகும். அனைத்து விதமான புற்றுநோய்களில் 14% எனும் சதவிகிதத்தில் இருக்கிறது. ஒவ்வொரு நான்கு நிமிடங்களுக்கும், நாட்டில் ஒரு பெண் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்படுகிறது. ஆண்டுக்கு 1.5 லட்சத்திற்கும் அதிகமான புதிய நோயாளிகள் பாதிக்கப்படுகின்றனர். அதோடு, 50% பாதிப்புகள் 50 வயதிற்குட்பட்ட பெண்களிடம் நிலவுவதாகவும் கூறப்படுகிறது என்றார் அவர்.

இதுகுறித்துக் கூறுகையில், " நோயை முன்கூட்டியே கண்டறிவது விரைவில் குணமாவதற்கும், நலமுடன் வாழ்வதற்கும் கைகொடுக்கும். "மிக முக்கியமான விஷயம் விழிப்புணர்வு. பெண்கள் அறியாமையிலும், கவனக்குறைவாகவும் இருக்கக் கூடாது. இரண்டாவதாக, மார்பக சுயபரிசோதனை பற்றி கற்றுக்கொள்வது மற்றும் ஒரு மாதத்திற்கு ஒருமுறை பயிற்சி செய்வது அவசியம். அதுவும், 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு, ஆண்டுதோறும் மேமோகிராம் மேற்கொள்வதானது பரிந்துரைக்கப்படுகிறது.

தவிர, கோவிட்–19 தொற்றுநோய் அச்சுறுத்தலானது புற்றுநோய் சிகிச்சையில் பின்னடைவை ஏற்படுத்தியது நினைவுகூறத்தக்கது. பயணக் கட்டுப்பாடுகள், போக்குவரத்துச் சிக்கல்கள், தொற்றுநோய் அச்சம் மற்றும் பல்வேறு காரணமாக பல நோயாளிகள் சரியான சிகிச்சையைப் பெற முடியவில்லை என்பதும் வருத்தத்துக்குரியது," என்று கூறினார் டாக்டர் எம்.ஏ.ராஜா.

வேலூர் விஐடி பல்கலைக்கழகம் சார்பில் விவசாயிகளுக்கு மாதிரி விவசாய பயிற்சி திட்டம்

வேந்தர் ஜி. விசுவநாதன் தகவல்

சென்னை, ஜன.28–

விவசாயத்தில் இந்தியா புரட்சி படைக்க வேலூர் விஐடி மாதிரி விவசாய பயிற்சியை உருவாக்கி வருகிறது. இதை நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் கடைப்பிடித்தால், விவசாயத்தில் இந்தியா முன்னணியில் இடம் பிடிக்கும் என்று வேந்தர் ஜி. விசுவநாதன் தெரிவித்தார்.

வேலூர் விஐடி தொழில்நுட்ப இன்ஸ்டியூட்டில் வேந்தர் ஜி.விசுவநாதன் குடியரசு தினத்தில் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், நாட்டில் வறுமையை ஒழிக்க மத்திய மாநில அரசுகள் முனைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் பொருளாதார வளர்ச்சி பெற்று வருகிறது. ஆனால் பொருளாதார வளர்ச்சி தீவிரமாக வளர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தியாவில் எந்த ஒரு ஏழையும் இருக்கக் கூடாது. இதற்கு பொருளாதார தன்னிறைவு வேண்டும் என்றார்.

நாட்டில் ஏழ்மையை ஒழிக்க மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க

வேண்டுமென்றும் அவர் கூறினார்.

உயர்கல்விக்கு மத்திய மாநில அரசுகள் ஊக்கமளிக்க வேண்டும். விவசாய துறையில் இந்தியா முன்னேறி வருகிறது. இத்துறையை மேம்படுத்த விவசாயத்தில் நவீன தொழில்நுட்பம் கடைப்பிடிக்க வேண்டும்.

விஐடி பல்கலைக்கழகத்தில் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்ப பயிற்சிக்கு மாதிரி அமைப்பை உருவாக்கி வருகிறோம். இது அனைத்து விவசாயிக்கும் உதவி, நாடு விவசாயத்தில் முன்னணியில் செயல்பட உதவும் என்றார்.

துணை தலைவர்கள் சங்கர் விசுவநாதன், ஜி.வி. செல்வம், இணை துறை வேந்தர் எஸ். நாராயணன், பதிவாளர் கே.சத்தியநாராயணன் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

தென்னை உழவர் உற்பத்தி நிறுவனம் சார்பில் தென்னீரா ஆரோக்கிய பானம் அறிமுகம்

சென்னை, ஜன.28–

தென்னை உற்பத்தியாளர்களின் வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் நிறுவனம் கோவை பல்லடத்தை சேர்ந்த உலக தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனம். இது "தென்னீரா'' என்ற பெயரில் இயற்கை பானத்தை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. இந்நிறுவனத்தின் முதல் நேரடி விற்பனை மையத்தை தமிழக அரசின் தென்னை வளர்ச்சி வாரியத்தின் இயக்குநர் பாலசுதாஹரி மவுண்ட் பூந்தமல்லி சாலையில் சென்னை வர்த்தக மையம் எதிரில் உள்ள பிரிசிசன் அலுவலகத்தில் திறந்து வைத்தார்.

இது குறித்து பாலசுதாஹரி பேசும்போது, "உலக தென்னை உழவர் – உற்பத்தியாளர் நிறுவனம் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைந்தேன். இதன் இயக்குநர்கள் ஏ.சக்திவேல் (பாப்பிஸ் குழுமம்), பிரிசிஸன் குழும தலைவர் கே.பாலசுப்ரமணியன், ஸ்கை குழுமத்தின் தலைவர் வி.சுந்தரராஜ், சென்னை சில்க்ஸ் குழும தலைவர் பி.கே.ஆறுமுகம், ராம்ராஜ் குழும நிறுவனங்களின் தலைவர் கே.ஆர் நாகராஜன் ஆகியோர் இத்தயாரிப்பை அறிமுகம் செய்ததற்காக மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இவர்கள் அனைவரும் வேளாண் பெருமக்களின் நலனுக்காக

பல்வேறு முன்னெடுப்புகளை திட்டமிட்டு வருகின்றனர் இந்த இயற்கை ஆரோக்கிய பானத்தில் ஆல்கஹால் துளியும் இல்லை. இது புதியது, ஆரோக்கியமானது, பல்வேறு உடல்நல அம்சங்களை உள்ளடக்கியது'' என்றார்.

முதன் முறையாக அழகிய டெட்ரா பேக்கில் வெளிவந்துள்ள தென்னீரா, அறை வெப்ப நிலையிலேயே பாதுகாக்க உகந்தது. குளிர்சாதனப் பெட்டியில் வைக்கத் தேவையில்லை. செயற்கை வேதிபொருட்களோ, பதப்படுத்தும் பொருட்களோ இல்லாமலேயே இது பாதுகாப்பாகவே இருக்கும்.

தென்னீரா, ஒரு மருத்துவ குணம் வாய்ந்த, உடனடியாக ஆற்றலைத் தரக்கூடிய பானம் ஆகும். செல் சிதைவு, அழிவைக் காக்கக் கூடிய ஆண்டி ஆக்ஸிடெண்ட்ஸ் நிறைந்த வைட்டமின் ஏ, சி ஆகியவற்றை இது உள்ளடக்கியதாகும். இதில் எலெக்ட்ரோ லைட்ஸ் இருப்பதால் அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய உடல் பராமரிப்புக்கும் உதவும். விரைவிலேயே தமிழக மக்களின் விருப்ப பானமாக தென்னீரா உருவெடுக்கும். அனைத்து தரப்பு மக்களின் வசதிக்கேற்ப 30 டெட்ராபேக் அடங்கிய பெட்டி, ரூ.1500க்கு அறிமுக சலுகையாகத் தரப்படுகிறது என்றார்.

தென்னீரா, திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் உள்ள 120 ஏக்கர் தென்னந்தோப்பில் தென்னங் குருத்திலிருந்து கைபடாமல் பெறப்படும் பானம் ஆகும்.

Kothari PETROCHEMICALS LTD

கோத்தாரி பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: "கோத்தாரி பில்டிங்ஸ்" நெ.115, மஹாத்மா காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.
CIN: L11101TN1989PLC017347 Phone: 044-35225527 / 35225528
Email: secdept@hckgroup.com, Website: www.kotharipetrochemicals.com

31.12.2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் நடப்புக் காலத்திற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ரூ. இலட்சத்தில்)

விவரங்கள்	31.12.2021 அன்று முடிவடைந்த காலாண்டு	31.12.2021 அன்று முடிவடைந்த காலம்	31.12.2020 அன்று முடிவடைந்த காலாண்டு
	தணிக்கை செய்யப்படாதது		
இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம்	10,552.95	27,101.83	6,286.20
வரி, தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன், நடப்பு காலத்திற்கு நிகர லாபம் (+) / நஷ்டம்(-)	1,309.05	3,765.83	1,072.37
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (+)/ நஷ்டம் (-)	1,309.05	3,607.69	1,072.37
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (+)/ நஷ்டம் (-)	904.76	2,590.55	792.44
நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் /(நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் இதர விரிவான வருமானம்]	905.27	2,587.94	792.21
சமபங்கு மூலதனம்	5,918.68	5,918.68	5,918.68
ரிசர்வுகள் (முந்தைய வருட பேலன்ஸ் ஷீட்டில் காண்பிக்கப்பட்டுள்ளபடி மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)	-	-	-
பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.10/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) (ரூபாயில்)			
(அ) அடிப்படை	1.54	4.40	1.35
(ஆ) டைல்யூடு	1.54	4.40	1.35

குறிப்பு : மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் முடிவடைந்த காலத்திற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டு மற்றும் முடிவடைந்த காலத்திற்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.kotharipetrochemicals.com ஆகியவற்றில் கிடைக்கும்.

கோத்தாரி பெட்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட்டுக்காக
அர்ஜூன் B. கோத்தாரி
நிர்வாக இயக்குநர்

இடம் : சென்னை
நாள் : 27.01.2022

டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: G–3, பழைய எண். 28–ஏ, புதிய எண். 67, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை–600 018.
CIN: L74210TN1986PLC012791 Tel: 022 24156538, Fax: 022 24115260
Website: www.tcms.bz, Email: investors@tcms.bz

31 டிசம்பர், 2021–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத தனியான மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் (ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	தனியானது			ஒருங்கிணைந்தது		
	முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு	முடிந்த காலாண்டு		முடிந்த ஆண்டு
	31/12/2021	31/12/2020	31/03/2021	31/12/2021	31/12/2020	31/03/2021
செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	(441.51)	119.59	(181.60)	(441.51)	636.50	730.08
சாதாரண செயல்பாடுகளில் வரிக்கு பின் நிகர லாபம்/(நஷ்டம்)	(494.03)	68.30	(365.71)	(1644.35)	595.20	499.15
வரிக்குப் பின் காலத்திற்கான நிகர லாபம்/ (நஷ்டம்) (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	(494.03)	68.30	(365.71)	(1644.35)	595.20	499.15
காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின் காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) மற்றும் வரிக்கு பின் இதர விரிவான வருமானம் உள்ளடக்கியது)	(1404.75)	65.92	(349.17)	(2682.05)	628.11	515.69
சம பங்கு மூலதனம்	1050.00	1050.00	1050.00	1050.00	1050.00	1050.00
ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10 /– (அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) அடிப்படை மற்றும் பலமிழந்தது	(4.71)	0.65	(3.48)	(15.66)	5.67	4.75

குறிப்புகள்:

1. மேற்கண்ட முடிவுகள் தணிக்கை குழுவினால் ஆய்வு செய்து பரிந்துரைக்கப்பட்டு 27 ஜனவரி, 2022 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டன.
2. செபி கட்டுப்பாடுகள், 2015–ன் கீழ் (பட்டியல் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 33–ன் கீழ் 31 டிசம்பர், 2021–ல் முடிந்த காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரத்தின் சுருக்கம் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் என்எஸ்இ மற்றும் பிஎஸ்இ இணையதளங்களான www.nseindia.com மற்றும் www.bseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.tcms.bz–ல் கிடைக்கும்.
3. முந்தைய காலாண்டுகளில் தொடர்புடைய நிகர வருவாயைக் காட்டிலும், பணச் சந்தை நடவடிக்கைகளில் இருந்து மொத்த வருவாயை வெளிப்படுத்துவதன் மூலம், துணை நிறுவனம் வருவாய் வெளிப்படுத்தும் முறையை மாற்றியிருப்பதால், இதனுடன் தொடர்புடைய ஒருங்கிணைந்த முந்தைய காலாண்டு புள்ளிவிவரங்களை ஒப்பிட முடியாது.
4. கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தினால் அறிவிக்கப்பட்ட இந்திய கணக்கியல் தர நிலைகளின்படி (இந்த் ஏஎஸ்) மேற்கண்ட முடிவுகள் உள்ளது.

குழு உத்தரவுப்படி
சுந்தர் ஐயர்
சேர்மன்

இடம்: மும்பை
தேதி: 27.01.2022

அசாதாரணப் பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பு

இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால் , தேஜஸ்வி ஆஹாராம் லிமிடெட் (நிறுவனம்)–ன் அசாதாரணப் பொதுக் கூட்டமானது , நிறுவனங்கள் சட்டம் 2013 (சட்டம்)–ன் கூறுகளின்படியும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய நிறுவனங்கள் விவகாரத் துறை அமைச்சகத்தின் சுற்றிக்கை எண். 14 /2020 தேதி ஏப்ரல் 8 ,2020,17 /2020 ஏப்ரல் 13 , 2020, 20 /2020 தேதி மே 5 , 2020 மற்றும் 2 /2021 தேதி ஜனவரி 13 , 2021 மற்றும் 20 /2021 தேதி டிசம்பர் 8 , 2021 –ல் உள்ள விதிகளின்படியும் செபி அமைப்பின் (கடப்பாடுகள் பட்டியலிடுதல் மற்றும் தெரிவிக்க வேண்டிய அம்சங்கள்) நெறிமுறைகள் 2015 ('செபி பட்டியலிடுதல் நெறிமுறைகள்) அதனுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய செபி சுற்றிக்கை எண்.SEBI /HO /CFD /CM01 /CIR /P 2020 / 79 தேதி மே 12 ,2020 மற்றும் SEBI /HO /CFD /CMD 2 /CIR /P2021 / 11 தேதி ஜனவரி 15, 2021ல் உள்ள கட்டளைகளின் படியும் ,காணொளிக் காட்சி (VC) / பிற ஒலி ஒளி சாதனங்கள் வாயிலாக, அசாதாரணப் பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள செயல்களை நிறைவேற்றுவதற்காக , பிப்ரவரி 21 2022 – திங்கட்கிழமையன்று மதியம் 02.00 மணியளவில் (இந்திய நேரப்படி) நடைபெறும்.

மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் கண்டுள்ளவாறு, அசாதாரணப் பொதுக் கூட்டம் பற்றிய அறிவிப்பின் மின்னணு வடிவ நகல்கள் நிறுவனத்தின் / RTA வின் / டெபாசிட்டரிகளில் தங்கள் இ–மெயில் முகவரிகளைப் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு இ– மெயில் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிறுவனங்கள் சட்டம், 2013–ன் பிரிவு 108–ன் படியும் அதனுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய செபியின் (கடப்பாடுகள் பட்டியலிடுதல் மற்றும் தெரிவிக்கப்பட வேண்டிய தேவை அம்சங்கள்) நெறிமுறைகள் 2015 க்கு இணங்கவும் நிறுவனமானது, சாதாரணப் பொதுக் கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் தொடர்பாக, உறுப்பினர்கள் தங்கள் வாக்குகளை மின்னணு ரீதியாக அளிக்க ஏதுவாக , CDSL – ஆல் வழங்கப்பட்டுள்ள எலக்ட்ரானிக் வாக்களிக்கும் தளத்தைப் பயன்படுத்தி தொலைதூர இ–வோட்டிங் முறையை உறுப்பினர்களுக்கு வழங்குகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறது. தொலைதூர இ–வோட்டிங் முறையில் வாக்களிக்காத உறுப்பினர்களும் அசாதாரணப் பொதுக் கூட்டம் நடைபெறும் நாளன்று வாக்களிக்க எலக்ட்ரானிக் வாக்களித்தல் வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாக்கு செலுத்தும் நடைமுறையை வெளிப்படையாகவும் நியாயமான முறையில் நடத்த ஏதுவாக, இயக்குநர்கள் குழுவானது, இதனுடைய கூர்ந்தாய்வாளர் (Scrutinizer) ஆக திரு. யோகேஷ் K சந்தக், கூட்டாளர், காஸ்ட் கணக்காளர்கள், சென்னை அவர்களை நியமனம் செய்துள்ளது.

உறுப்பினர்கள் பின்வரும் அம்சங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும்

1. அசாதாரணப் பொதுக் கூட்டம் நடைபெறும் நாளான பிப்ரவரி 21 ,2022 திங்கட்கிழமை அன்று மதியம் 02.00 மணியளவில் (இந்திய நேரப்படி) காணொளிக் காட்சி (VC)/பிற ஒலி ஒளி சாதனங்கள் வாயிலாக உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம்.
2. கெடுத் தேதியான பிப்ரவரி 11, 2022 அன்று வரையாக, டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயன் பெறும் உடைமையாளர்களின் பதிவேட்டில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களுக்கு மட்டுமே வருடாந்திர பொதுக் கூட்டத்தில் தொலைதூர இ–வோட்டிங் வசதியைப் பயன்படுத்த, வாக்கு அளிக்க தகுதி பெற்றவர்களாவார்கள் .
3. CDSL – வருடாந்திரப் பொதுக் கூட்ட தருணத்தில் இ– வோட்டிங் வசதியை அளிப்பதற்காக அமர்த்தப்பட்டுள்ளனர்.
4. தொலைதூர இ – வோட்டிங் வசதி என்பது பிப்ரவரி 18, 2022 வெள்ளிக்கிழமையன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரப்படி) தொடங்கி, பிப்ரவரி 20 ,2022 ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 5.00 மணிக்கு (இந்திய நேரப்படி) முடிவடையும். இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்குப் பிறகு தொலைதூர இ–வோட்டிங் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. ஒரு தீர்மானத்தின் தொடர்பாக, ஓர் உறுப்பினர் வாக்கு செலுத்திய பின்னர், அதன் பின்னர் மாற்றிக் கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது .
5. அசாதாரணப் பொதுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பாக தங்கள் வாக்குகளை தொலைதூர முறையில் செலுத்திய உறுப்பினர்கள், காணொளிக் காட்சி / பிற ஒலி ஒளி சாதனங்கள் வாயிலாக அசாதாரணப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் மீண்டும் வாக்கு செலுத்த அனுமதிக்கப்பட மாட்டாது. தொலைதூர இ–வோட்டிங் முறையில் வாக்கு செலுத்தாத உறுப்பினர்கள், அசாதாரணப் பொதுக் கூட்டத்தில் காணொலிக் காட்சி /ஒலி ஒளி சாதனங்கள் வாயிலாக கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு அசாதாரணப் பொதுக் கூட்டத்தில் இ–வோட்டிங் மூலம் வாக்கு அளிக்க தகுதி உண்டு
6. மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யாத உறுப்பினர்கள் மின்னணு முறையில் பங்குகளை வைத்திருந்தால் அவர்களின் வைப்புத் தொகை பங்கேற்பாளர்கள் மூலம் வைப்பவர்களிடம் மற்றும் காகித வரியில் பங்குகளை வைத்துள்ள பங்குதாரர்கள் மின்னஞ்சல் முகவரி **https://www.investor@cameoindia.com** மொபைல் எண். பான் கார்டு, சுயசான்று அளிக்கப்பட்ட நகல் மற்றும் பங்கு சான்றுகளின் நகலை கோரிக்கை கடிதத்தின் நகலுடன் கம்பெனியுடன் RTA க்கு மின்னஞ்சல் உடன் அனுப்ப வேண்டும்.
7. இ–வோட்டிங் தொடர்பாக, ஏதேனும் விசாரணைகளுக்கு உறுப்பினர்கள் CDSL - ஹெல்ப் டெஸ்க்–க்கு **helpdesk.evoting@cdslindia.com** இ–மெயில் அனுப்பி தெளிவு பெறலாம் அல்லது தொடர்பு கொள்ளவும்– 022-23058738 மற்றும் 022-23058542-43.
8. அசாதாரணப் பொதுக் கூட்டம் நிறைவுற்ற 48 மணி நேரத்திற்குள் நிறுவனமானது, இ–வோட்டிங் முடிவுகளை அறிவிக்கும் பங்குச் சந்தைகளுக்கும் அது குறித்து தெரிவிக்கும்.

இயக்குநர்கள் குழுவின் ஆணையின் படி
தேஜஸ்வி ஆஹாராம் லிமிடெட் – க்காக
ஓப்பம்
ஷ்யாம் குமார்
நிர்வாக இயக்குநர்
DIN : 09098976

தேதி – ஜனவரி 25 ,2022
இடம் – சென்னை

NAME CHANGE

I, Ganga Devi W/O Rajkumar Date of Birth 01.01.1988 Residing at 16/3, Sriniwasa Iyer Street, Indian Bank, West Mambalam , Chennai-600033 Will be henceforth Known as GARIMA.

- Ganga Devi

வேப்கோ இந்தியா லிமிடெட்

CIN:L34103TN2004PLC054667
பதிவு அலுவலகம்:; ப்ளாட் எண் 3 (SP) 3-வது மெயின் ரோடு, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை - 600 058.
Ph.91 44 42242000 , Fax .91 44 42242009 www.zf.com, email: cvcs.info.india@zf.com

31 டிசம்பர் 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ. லட்சங்களில் EPS தவிர)

விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கு		முடிவடைந்த ஆண்டு
	31.12.2021 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2021 (தணிக்கை செய்யப்படாதது)	31.12.2020 (தணிக்கை செய்யப்படாதது)	31.12.2021 (தணிக்கை செய்யப்படாதது)	31.12.2020 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது)
இயக்கங்களின் மூலம் மொத்த வருமானம்	66,180.76	62,413.79	57,431.40	178,976.01	118,347.62	190,238.87
வரி, தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன், நடப்பு காலத்திற்கு நிகர லாபம் (+) / நஷ்டம் (-)	4,322.21	4,495.17	7,304.18	11,902.56	8,501.51	15,226.52
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு முன் நிகர லாபம் (+) / நஷ்டம் (-)	4,322.21	4,495.17	7,304.18	11,902.56	8,501.51	15,226.52
தனிப்பட்ட வகைகள் மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்குப் பின், நடப்புக் காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் (+) / நஷ்டம் (-)	3,183.52	3,225.20	5,242.97	8,547.11	5,617.12	10,380.49
நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் / (நஷ்டம்) மற்றும் வரிக்குப் பின் இதர விரிவான வருமானம்]	3,184.89	3,277.94	5,108.27	8,552.57	5,188.31	10,185.59
சமபங்கு மூலதனம்	948.38	948.38	948.38	948.38	948.38	948.38
ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக முந்தைய கணக்கு ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட அறிக்கையின்படி)						198,691.96
ஒரு பங்கு சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (தொடரும் மற்றும் நிறுத்தப்பட்ட இயக்கங்களுக்கு)						
அடிப்படை	16.78	17.00	27.64	45.06	29.61	54.73
டைல்யூட்டட்	16.78	17.00	27.64	45.06	29.61	54.73

குறிப்புகள் :

1. மேற்கண்ட டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதி நிலை முடிவுகள் தணிக்கையாளர் குழுவினால் மறுபார்வையிடப்பட்டு, அவர்கள் பரிந்துரையின்படி, இயக்குனர் குழு ஜனவரி 27, 2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கண்ட டிசம்பர் 31, 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஒன்பது மாதங்களுக்கான நிதிநிலை முடிவுகள் நிறுவன தணிக்கையாளர்களால் வரையறைக்குட்பட்ட ஆய்வுக்குட்பட்டது. தணிக்கையாளர்களின் அறிக்கை மாற்றி அமைக்கப்படவில்லை.
2. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133, மாற்றப்பட்ட இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டு விதிகள் 2015, மற்றும் இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டுகள் (இண்ட் ஏஎஸ்)-க்கு ஏற்றவாறு நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
3. செயல்பாடுகளின் வருவாய் பின்வருவனவற்றினை உள்ளடக்கியுள்ளது.

விவரங்கள்	முடிவடைந்த காலாண்டு			முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கு		முடிவடைந்த ஆண்டு
	31.12.2021 (தணிக்கை செய்யப்படாதது)	30.09.2021 (தணிக்கை செய்யப்படாதது)	31.12.2020 (தணிக்கை செய்யப்படாதது)	31.12.2021 (தணிக்கை செய்யப்படாதது)	31.12.2020 (தணிக்கை செய்யப்படாதது)	31.03.2021 (தணிக்கை செய்யப்பட்டது)
பொருட்கள் விற்பனை	59,264.59	55,882.89	51,905.33	159,552.01	100,210.95	166,642.54
மற்றவைகள்	6,027.53	5,770.24	4,744.31	16,584.95	14,906.74	19,707.47
மொத்தம்	**65,292.12**	**61,653.13**	**56,649.64**	**176,136.96**	**115,117.69**	**186,350.01**

4. கம்பெனி இயக்கம் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் மற்றும் அது சம்பந்தமான சேவைகள் சம்பந்தப்பட்ட ஒரு துறையை மட்டும் சார்ந்தது.
5. முந்தைய காலாண்டுக்கான / காலத்திற்க்கான தொகைகள் நடப்பு காலாண்டுக்கான/ காலத்திற்கான காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டது.

சென்னை
27.01.2022

இயக்குநர் குழு சார்பாக
P கணியப்பன்
நிர்வாக இயக்குனர்